REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 31உ வியாழன் (13—6—57) ★ ★ வெளியூர்: வைகாசி 32உ வெள்ளி (14—6—57) [இதழ் 312

வடநாட்டில் மேலும் இரு பெரும் தொழிற்சாலைகள்

அசாம் எண்ணெயைச் சுத்திகரிக்க பீகாரில் தொழிற்சாலை நிறுவுவது என்று முடிவு செய்திருப்பதுடன், இப்போது கல்கத்தா அருகேயும் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவதென டெல்லிப் பெரியவர்கள் முடிவு செய்திருக்கிறார்களாம்.

வடகிழக்கு இந்தியாவில் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கிற எண்ணெயைச் சுத்திகரிக்கவே கல்கத்தாவில் ஒரு தொழிற்சாலை நிறுவப் போகிறார்களாம்!

உரிமைப் போரை ஒடுக்க பண்டாவின் சூழ்ச்சி

'பம்பாய் மராட்டியருக்கே!'

'அதிருப்தியடைந்துள்ளவர்கள் பிரிந்துசெல்வதை தடுக்க முடியாது'

'இரு மொழி மாநில ஏற்பாட்டினை புனர்பரிசீலனை செய்தாக வேண்டும்'

பண்டித குன்ஸ்ரு கருத்து

பூனா, சூன் 12—

"அதிருப்தி கொண்ட ஒரு பெரும் பகுதி மக்களை அவர்கள் ஒரே மொழி பேசுகிறவர்களானாலும், நாம் ஒன்றாக இணைத்து வைத்துக் கொண்டிருக்க முடியாது"

என்று, மாநிலப் புனரமைப்புக் குழு உறுப்பினராயிருந்த பண்டித இருதயநாத் குன்ஸ்ரு குறிப்பிட்டிருக்கிறார்.

எவருக்கும் திருப்தியில்லை

இந்திய ஊழியர் சங்கத் தலைவரான அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"ஒரு பெரிய இரு மொழி பம்பாய் மாநிலம் அமைப்பது என்ற சர்க்காரின் முடிவு எவரையும் திருப்தி செய்பவில்லை; மராட்டியர்களையோ, குஜராத்திகளையோ, அல்லது விதர்ப்ப மக்களையோ அது திருப்தி செய்யவில்லை.

மீண்டும் பம்பாய்

"தேர்தல் முடிவுகளை ஒரு தீர்ப்பாகக் கருதுவதானால், இரு மொழி பம்பாய் பற்றிய முடிவு உண்டாக்கியிருக்கும் உணர்ச்சி சீக்கிரம் தணியக் கூடியது என்று கொள்வதற்கில்லை.

"எனவே, டில்லி சர்க்கார், இந்தப் பம்பாய்ப் பிரச்சினையை மீண்டும் புனராலோசனை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

பம்பாய் மராட்டியருக்கே

"இப்போதைய அமைப்பிலிருந்து மராத்திய-குசராத்தி பகுதிகளைப் பிரிக்க வேண்டுமானால், பம்பாய் நகரம் மராட்டியர்களுக்காக வேண்டும்.

"விதர்ப்ப மக்கள் மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள்; ஏனெனில் அவர்கள், இந்த இருமொழி அமைப்பில் பலவந்தமாக இழுக்கப்பட்டார்கள்; மேலும் நாகபுரியின் முக்கியத்துவம் சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது.

"விதர்ப்ப மக்கள் திருப்திப் படுத்தப்பட வேண்டும்; இன்றேல் இப்போதைய அமைப்பிலிருந்து அவர்கள் பிரிந்து செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும்."

தமிழர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையாம்

ஆயுத விற்பனைக்குத் தடை போன்ற பீதி கிளப்பும் உத்தரவுகளையும் பிறப்பிக்கிறார்

'மிரட்டலுக்கு அஞ்சோம்; சமர் புரிவோம்' என்கிறார் தமிழரசுக் கட்சிச் செயலாளர்

கொழும்பு, சூன் 13—

தமிழரசுக் (பெடரல்) கட்சிக்கு வெளியில் உள்ள தமிழர் தலைவர்களை அழைத்து, தனது 'தமிழ் மொழியையும் நியாயமான அளவு உபயோகித்துக் கொள்ள வழிசெய்யப்படும்' என்ற திட்டம் குறித்து விவாதிக்க முயற்சிப்பதின் மூலம் பிரதமர் பண்டாரநாயகா, தமிழர்களின் ஒற்றுமையைக் குலைத்து, உரிமைப்போரை ஒடுக்க சூழ்ச்சி செய்வதாகக் கூறப்படுகிறது.

இப்படிப்பட்ட அழைப்பு தமிழர் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம், முன்னாள் உதவி மந்திரி வி. குமாரசாமி போன்றவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்.

திரு பொன்னம்பலம் அவர்கள், 'இலங்கைக்கு ஒரு பெடரல் ஆட்சி முறை (தமிழ்ப் பகுதிகளுக்குச் சுதந்திரம் வழங்கும் ஒரு ஆட்சி முறை) கூடாது' என்று ஆதி முதல் எதிர்த்து வருகிறவர் ஆவார்.

சர்க்காரின் ஆர்ப்பாட்டம்

தமிழரசுக் கட்சி நடத்தவிருக்கும் உரிமைப் போராட்டம் பற்றி பண்டா சர்க்கார் பெரும் ஆர்ப்பாட்டமான நடவடிக்கைகளை எல்லாம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிகிறது.

ஆகஸ்டுப் போராட்டத்தின் போது ஆயுதங்கள்—துப்பாக்கி போன்றவை உபயோகிக்கப்படலாம் என்று வேறு வீண் பீதியைக் கிளப்பிவிட்டு, அதனால் அத்தகு ஆயுதங்கள் விற்கப்படுவதற்குத் தடை விதித்திருப்பதாக அறிவித்திருப்பது அத்தகு நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

★

அஞ்சோம் - சமர்புரிவோம்!

"பண்டாவின், 'போராட்டத்தை நிறுத்துங்கள்,' என்ற வேண்டுகோளுக்கு நாங்கள் செவி

(4-ம் கலம் பார்க்க)

மூன்று இலட்சம் கடிதங்கள் பிரித்து அனுப்பாமல் தேக்கம்

சர்க்காரின் பிடிவாதப் போக்கின் எதிரொலி

பாட்னா, சூன் 11—

சுமார் 200 ஆர்.எம்.எஸ். ஊழியர்கள் அதிக நேரம் வேலை செய்ய மறுத்துவிட்டதின் விளைவாக சுமார் 3 இலட்சம் கடிதங்கள் வரை பிரிக்கப்படாமலிருப்பதாகக் கூறப்படுகிறது.

பாட்னா இரயில்வே சந்திப்பில் உள்ள ஆர்.எம்.எஸ். அலுவலகத்தில் குடிதண்ணீர் தாங்கவில்லை என்றும், இதற்காக கொடிய வெப்பத்திலிருந்து பாதுகாக்க திரைச் சீலைகள் போட்டுத் தர வேண்டும் என்றும் ஊழியர்கள் கோரியிருப்பதை இதுவரை நிர்வாகிகள் செய்துதாராததினாலேயே, கோரிக்கையை வற்புறுத்துவதற்காக இந்த நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது.

மேலே கிளம்பியதும் வெடித்துவிட்டதாம்!

அமெரிக்காவின் முதல் ராக்கெட் சுடப்பட்டதில் அது மேலே கிளம்பியதும் வெடித்துவிட்டதாம்!

இந்த 'ராக்கெட்' 6,000 மைல் தூரம் சென்றிருக்க வேண்டுமாம்.

திருக்குறள் கூறும் அறிவுரைகள்

'உலக இலக்கியங்கள் எதிலும் இல்லை'

'குறள் உணர்வு நீடித்து நிலைக்கவேண்டும்'

பேரறிஞர் டாக்டர் சுவைட்சர் கருத்து

கொழும்பு, சூன் 13—

"திருக்குறள் போதிக்கும் முதுரைகளை முதன் முதலில் நான் படித்தபோது அவை என்னை வெகுவாகக் கவர்ந்தன; என்னை ஆழ்ந்த உணர்ச்சி வயப்படுத்தின. நீதிச் சாரங்களின் ஆழ்ந்த வெளிப்பாடுகளில் குறளும் ஒன்று என நான் கருதுகிறேன்.

"ஐரோப்பாவில் உள்ள பலருக்கு நான் குறளை அறிமுகப் படுத்தினேன்; அவர்கள் எல்லாம் அதனை அறிந்தபோது வெகுவாகப் பாராட்டினார்கள். குறள் உணர்வு நீடித்து நிலைக்க வேண்டுமென விழைகிறேன்"

என்பதாக டாக்டர் சுவைட்சர் என்ற பேரறிஞர் கொழும்பு திருக்குறள் மாநாட்டுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர், 'இந்திய சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' என்ற தனது நூலில், திருக்குறளைப் பற்றி வெகு அற்புதமாக எழுதியிருக்கிறார்.

"'வாழ்வு துறப்பதற்கன்று; வாழ்வதற்கே' என்ற கொள்கையை இந்தியாவில் அழுத்தந் திருத்தமாக நிலைநாட்டி, மக்களின் சிந்தனையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய நூல் திருக்குறள்; திருக்குறளில் கூறப்படுவன போன்ற சிறந்துயர்ந்த அறிவுரைகள் உலகத்தில் உள்ள இலக்கிய நூல்கள் வேறொன்றிலும் கூறப்படவில்லை,"

என்பது இப்பேரறிஞரின் கருத்தாகும்.

பதவி ஏற்புக்கு ரூ. 4,398 செலவிடப்பட்டதாம்!

திருவனந்தபுரம், சூன் 11—

சமீபத்தில் கேரள அமைச்சர்கள் பதவி ஏற்றுக்கொண்டதற்கு ரூபாய் 4,398 செலவிடப்பட்டதென்று கணக்கிடப்பட்டுள்ளது.

நாகர்போராட்டம்பற்றிய உண்மைகள்

மக்கள் கண்ணிலிருந்து மறைக்க சர்க்கார் முயற்சிக்கிறது

ஆயுதம் மூலம் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட முடியாது

அசாம் சட்ட சபையில் கண்டன முழக்கம்

'நாகர் பிரச்சினை பற்றிய உண்மைகளை மக்கள் கண்ணிலிருந்து மறைத்துவிட்டு நிலைமையைக் குழப்பிக்கொண்டிருக்கும் தவறினையே சர்க்கார் செய்துவருகிறது' என்றும், 'சர்க்கார் பிரச்சினைக்கு ஆயுதம் மூலம் பரிகாரம் தேட முற்படுவது கண்டிக்கத்தற்குரியது' என்றும், 'நாகர் பிரச்சினைக்கு சமாதானமான—அரசியல் ரீதியான ஒரு முடிவு காண்பதில் சர்க்காருக்கு விருப்பமில்லாதிருப்பது பெரும் தவறு' என்றும் அசாம் சட்டசபையில் கண்டனம் முழக்கப்பட்டிருக்கிறது, பல எதிர்க் கட்சியினரால்!

★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு'

'நம் நாடு' ஐந்தாம் ஆண்டு துவக்க விழா மலர் 15-6-57 அன்று வெளியிடுவதாக அறிவித்திருந்தோம்; ஆனால், அலுவலக ஊழியர்களில் பெரும்பாலானவர்களுக்கு விஷக் காய்ச்சல் (இன்புளுயன்சா) கண்டு கஷ்டப்படுவதால், அன்று மலர் வெளிவராது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர்:
'நம் நாடு'

★★★★★★★★★★★★★★★★★

சான்பிரான்சிஸ்கோ, சூன் 12—

தண்ணீருக்குக் கீழ் செல்லும் ராக்கெட்டுகளைத் தயாரிப்பதில் அமெரிக்கா முன்னேறி வருகிறதாம்!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13—6—57 வியாழன்

நாகர் கிளர்ச்சி

இந்தியத் துணைக் கண்டத்து சர்க்காரின் வருமானத்தில் சரி பாதியை விழுங்கிக் கொழுக்கும் இராணுவத்தின் மூர்க்கத்தனமான நடவடிக்கைகள்கூட நாகர்தம் விடுதலைக் கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்கிவிடப் போதுமானவையாக இருக்கவில்லை என்பதை, அண்மையில் அசாம் சட்டசபையில் கவர்னர் பேசும்போது நாகர் போராட்டம்பற்றி தந்துள்ள குறிப்பு உலகுக்குப் பறைசாற்றுவதாயுள்ளது.

நாகர்களில் தீவிரவாதிகளாகி விட்டவர்களின் நடவடிக்கைகளுக்குக் காரணமாயுள்ள 'சுதந்திர நாக நாடு' என்ற அரசியல் கோரிக்கையை உலகின் கண்ணிலிருந்து மறைத்துவிடுவதற்காக, அவர்களது சுதந்திரக் கிளர்ச்சியை ஒடுக்க 'பலாத்காரமானவை' என்று சாக்குக் கூறிக்கொண்டு டில்லிப் பெரியவர்கள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள், பெரும் அவமானம் தேடித்தரும் தோல்விகளைத்தான் சம்பாதித்திருக்கின்றன என்பதை சற்று வருத்தத்தோடேனும் ஒப்புக்கொண்டு தானுகவேண்டும்.

'இராணுவ பலம் போதாது,' என்று அதற்கு 'சதை' வளர்க்கவும், உரம் ஊட்டவும், உதவி செய்யவும் என்ற விளக்கத்துடன் மலபார் போலீசார் வேறு அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

பல காலம் பயிற்சியும், நடைபெற்ற உலகப் போரில் ஈடுபட்ட அனுபவமும்கொண்ட 'இந்திய' இராணுவத்தினுல், துப்பாக்கி பிடித்து பழக்கமோ பயிற்சியோ இல்லாத நாக கிளர்ச்சிக்காரர்களை அடக்க முடியவில்லை என்ருல், அதற்கு இராணுவத்தின் திறமைக் குறைவுதான் காரணம் என்று கூட டில்லி அரசியல் வாதிகள் கருதக்கூடும். ஆனுல், உண்மையில் இதற்குக் காரணமாக நாம் உணரக்கூடியது எல்லாம், பயிற்சியும் பழக்கமும் இல்லாவிட்டாலும், நாகர்களின் இயற்கையான விடுதலைத் தாகம்தான் — தங்களது கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டும்; அரசியல் பொருளாதார உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற சுதந்திர வேட்கைதான் அவர்களுக்கு, பலமும் பயிற்சியும் அனுபவமும் கொண்ட ஒரு இராணுவத்திற்கு எதிராகப் போராடக்கூடிய வல்லமையையும், துணிவையும் ஏற்றியிருக்க வேண்டும் என்பதேயாகும்.

டில்லிப் பெரியவர்கள் — 'சுதந்திரத் தனி நாடு என்ற கோரிக்கையைக் கொண்டவர்களோடு நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது சாத்தியமே இல்லை' — என்ற தங்களின் பிடிவாதத்தைத் தளர்த்த மறுப்பதன் மூலம் தங்களது ஏகாதிபத்திய சுயரூபத்திற்கு மேலும் வெளிச்சம் தந்துள்ளார்கள்.

சமீப காலமாக அவர்களது இந்தப் பிடிவாதம் மேலும் இறுகி வருகிறது. ஏகாதிபத்தியவாதிகளின் பிடிவாதம் தளர்ந்ததாக வரலாறு இல்லை—தகர்க்கப்பட்டதாகத்தான் வரலாறு இருக்கிறது.

ஆதிக்கக்காரர்களின் பிடிவாதம் இறுக்கமாகும்போது, விடுதலைகோருவோரின் உணர்ச்சி பொங்கி வழிகிறது. நாக நாட்டு நிலை, இந்த உண்மைக்கு சிறப்பானதோர் விளக்கமாகும்.

'உலகில் தோன்றக் கூடிய பேரபாயங்களுக்கெல்லாம் மாமருந்து, எங்களது 'பஞ்சசீலம்' என்று பெருமைப்படுத்தப் டும் அந்த பஞ்சசீலக் கோட்பாடுகளில் முதன்மையானதே — 'தகராறுகளுக்குப் பேச்சுவார்த்தைகளின் மூலமே பரிகாரம் தேடவேண்டும்'— என்பதாகும். ஆனுல், 'ஊருக்கு உபதேசம் உனக்கில்லை......' என்ற வழியில் 'நாகர்களுடன் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை; யுத்தப் பிரகடனம் தான் அவர்களை வழிக்குக் கொண்டுவரும்' என்று பேசுகிருர்கள் பஞ்சசீலப் பிதாக்கள்!

இந்திய அரசியல் தற்காலிகமாக இதுபோன்ற பெரும் முரண்பாடுகளை ஜீரணித்துக் கொண்டாலும், என்ருே ஒரு நாள் எழுதப்படவிருக்கும் வரலாறு, டில்லிப் பெரியவர்களின் —குறிப்பாக பண்டித நேருவின் ஏகாதிபத்திய உள்ளக் கிடக்கைகளுக்கு ஒரு சாட்டையடி தரும் வரியையும் உள்ளடக்கியதாகத்தான் இருக்கும் என்:பதில் சந்தேகமே இருக்க முடியாது.

சுதந்திரத் தனிநாடு வேண்டும் என்று கோரும் நாகர் தலைவர்களுடன் 'பேச்சுவார்த்தைக்கே இடமில்லை' என்று கொக்கரிக்கும் டில்லியின் பிடிவாதம், இந்த விவகாரத்தில் பெரியவர்கள் மேற்கொண்டிருக்கிற 'நிலையின்' பலவீனத்தை மட்டுமல்ல — பெரியவர்களின் இராஜதந்திரத் தோல்வியையும் தான் விடுதலை விரும்பிகளுக்கு எடுத்துரைக்கின்றது.

டில்லியின்-குறிப்பாகப் பண்டிதரின் ராஜரீகத்திற்குக் கலைநுணுக்க மெருகு பூசி துதிபாடும் வடநாட்டு அரசியல் வட்டாரங்கள்கூட, நாகர்தம் கிளர்ச்சி பற்றிய டில்லியின் போக்கில் ஒரு விவேகமான மாறுதல் வேண்டும் என்று எடுத்துரைத்திருக்கின்றன, காலம் கடந்து! என்ருலும், அந்த வட்டாரங்களும் நாகர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதாக ஒப்பவில்லை.

நியாயமோ அநியாயமோ, கிளர்ச்சிக்காரர்களின் கோரிக்கை, அந்த நாட்டு மக்களின் மனப்பூர்வமான ஆதரவைப் பெற்ற ஒன்று என்ருல், அதனை ஏற்பதற்கு டில்லிப் பெரியவர்கள் மறுதலிக்கவேண்டிய அவசியம் என்ன? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்காமல், தங்களை ஏகாதிபத்தியவாதிகள் என்று குற்றஞ்சாட்டும் விடுதலை விரும்பிகளின் கோபக்கனலிலிருந்து டில்லிப் பெரியவர்கள் தப்பமுடியாது.

ஏகாதிபத்தியவாதிகள், இயற்கையான சுதந்திர உணர்ச்சிகளை, கசப்பான அனுபவங்களுக்குப் பிறகுதான் மதிக்கக் கற்றுக்கொள்வார்கள் என்பதற்குப் பரவலான சான்றுகள் உண்டு.

'இந்தச் சான்றுகளின் எண்ணிக்கையை நாங்கள் கூடுதலாக்குவோம்' என்று வடநாட்டுப் பாதுஷாக்கள் கூறுகின்றனர் போலும்!

அவர்கள் கசப்பான அனுபவங்களைப் பெறுவதில் நமக்கொன்றும் தடையில்லை; ஆனுல், அநியாயமாக விலைமதிப்பில்லா உயிர்களும், உழைப்புதந்த பணமும், இவர்கள் அந்த அனுபவங்களைப் பெறுவதற்காகப் பலியிடப்படுவதும் பாழாவதும்தான், நாம் அதிகமாகக் கவலைப்பட வேண்டிய விவகாரமாயுள்ளது.

'காங்கிரஸ் சர்க்கார் அந்நிய சர்க்காரே'

காசிமலைப் பகுதி மக்கள் கருத்து

அசாம் சட்டசபையில் எச்சரிக்கை

ஷில்லாங், சூன் 10—

"நாகர்மலைப் பகுதியில் சர்க்கார் செய்த தவறினை மீண்டும் இதர மலைப் பகுதிகளிலும் செய்வார்களேயானுல் நாட்டில் தொல்லைகள்தான் அதிகமாகும்"

என்று, அசாம் மாநில முன்னுள் மந்திரியும், காசி மலைவாழ் மக்கள் தலைவருமான நிகலஸ்ராய் என்பார் கண்டனம் தெரிவித்திருக்கிருர்.

கவர்னர் உரைமீது நடைபெற்ற விவாதத்தில் அவர் கலந்துகொண்டு பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பாகிஸ்தான் எல்லையோரத்தில் வாழும் காசிமலை மக்கள் மிகுந்த பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிருர்கள்.

"ஒரு காலத்தில் காசி மக்கள் வளமான வாழ்வு பெற்றிருந்தவர்கள். ஆனுல் இப்போது கவனிப்பாரற்று, பஞ்சத்தாலும் பட்டினியாலும் வாடுகின்றனர்.

"பிரிவினைக்கு முன்னுல் இங்கு நடைபெற்ற சுமார் ரூ. 360 இலட்சம் பெறுமான வர்த்தகம் பாழாகிவிட்டது. சுதந்திரத்திற்கு இந்த மக்கள் பலியானுர்கள்.

"காசி மக்கள் மீது அனுதாபம் கொண்டவர்களாக காங்கிரஸ் சர்க்கார் இல்லை. காசி மக்களின் பிரச்சினைகளையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. காங்கிரஸ் சர்க்கார் காசி மக்களுக்கு ஒரு அன்னிய சர்க்காராகவே தென்படுகிறது. அதனுல்தான் காங்கிரஸ் தேர்தலில் எல்லா இடங்களையும் காசி மலையில் இழந்தது."

வேலையற்றிருக்கும் எஞ்சினீயரிங் பட்டதாரிகள்

சென்னையிலும் மைசூரிலும் அதிகம்

புதுடில்லி, சூன் 11—

எஞ்சினீயரிங்பட்டதாரிகள் நூற்றுக்கணக்கில் ஓராண்டுக்கும் மேலாக வேலையில்லாது கஷ்டப்படுவதாகவும், இத்தகையபட்டதாரிகள் சென்னை, மைசூர், மற்றும் மேற்கு வங்கம், பம்பாய், டெல்லி ஆகிய மாநிலங்களில்தான் அதிகம் என்றும் சர்க்காரின் புள்ளி விவரம் ஒன்று கூறுகிறது.

எஞ்சினீயரிங் பட்டம் பெற்றவர்களில் 1956 செப்டம்பர் திங்கள் வரை 690 பேர் வேலையற்றிருந்ததாகவும், இந்த எண்ணிக்கை 1957 மார்ச் திங்கள் இறுதியில் 354 ஆகக் குறைந்தது என்றும் புள்ளி விவரம் கூறுகிறது.

இதேபோல, எஞ்சினீயரிங் படிப்பில் 'டிப்ளோமா' பெற்றவர்கள் 1956 செப்டம்பரில் 718 பேர் வேலையற்றிருந்ததாகவும், 1957 மார்ச் இறுதியில் 459 பேர்களாக இந்த எண்ணிக்கை குறைந்தது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

5 ஆண்டுகளுக்குள் மீண்டும் ஓர் யுத்தம்

உலக சமாதான மாநாட்டில் எச்சரிக்கை

கொழும்பு, சூன் 11—

"இன்னும் ஐந்தாண்டுகளுக்குள் மீண்டும் ஒரு உலக யுத்தம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள்தான் அதிகமாக இருக்கின்றன.

"சமாதானத்திற்கான வாய்ப்புகள் மூன்று பங்கு உள்ளன என்ருல், யுத்தத்திற்கான வாய்ப்புகள் 17 பங்கு இருக்கின்றன"

என்று, அமெரிக்கப் பேராசிரியரான ஸ்காட் நியரிங் என்பார் இங்கு நடைபெறும் உலக சமாதான மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

"இப்போதைய சூழ்நிலைகள்— அதாவது, 1945-ம் ஆண்டில் யுத்தம் முடிந்து 12 ஆண்டுகளுக்குப் பிறகுள்ள போக்குகள்—1918-ம் ஆண்டில் யுத்தம் முடிந்து 12 ஆண்டுகளுக்குப் பிறகு 1930 ஆண்டில் நிலவிய போக்குகளுடன் ஒப்பிடக் கூடியதாயிருக்கின்றது"

என்றும் அவர் எச்சரித்திருக்கிருர்.

அசாமில் கிடைக்கும் எண்ணெய்

சுத்திகரிக்க பீகாரில் தொழிற்சாலையாம்!

புதுடில்லி, சூன் 11—

அசாம் மக்கள் தங்கள் மாநிலத்தில்தான் அடுத்த எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையை நிறுவ வேண்டும் என்று கோரி நடத்திய விரிவான ஆர்ப்பாட்டங்கள் — கிளர்ச்சிகளுக்குப் பிறகும் டில்லி சர்க்கார், அந்தக் கோரிக்கைக்கு இணங்கியதாகத் தெரியவில்லை.

அசாம் எண்ணெயைச் சுத்திகரிக்க, பீகாரைச் சேர்ந்த பௌராணி என்ற இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த முடிவு அதிகாரபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படாவிட்டாலும், பீகார்தான் பல காரணங்களாலும் எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை நிறுவ ஏற்ற இடம் என்று 'பெரியவர்கள்'கூடி முடிவுசெய்துவிட்டனராம்!

விழித்துக்கொண்டது இந்திய சர்க்கார்?

சிகிச்சைபெற வெளிநாடு செல்வதற்குக் கட்டுப்பாடு?

புதுடில்லி, சூன் 12—

இந்தியாவில் போதுமான மருத்துவ சிகிச்சை இல்லாத நோய்களுக்காகவும், தீராத பிணியொன்றை குணப்படுத்த இயலாத விசேட சந்தர்ப்பங்களில் மட்டுமே அந்நியச் செலாவணி கோரும் மனுக்களை இனி இந்திய ரிசர்வ் பாங்கியில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்துமா, வயிற்றுவலி, பூச்சிக்கடி, உணவுக் கோளாறு, பொதுவான பலவீனம் போன்றவைகளுக்கெல்லாம் வெளிநாடுகளுக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்கு சிலர் சிபாரிசுகள் செய்யப்பட்டனர்; அதற்கான நற்சான்றுகளும் சுகாதார அதிகாரிகளால் தாராளமாக வழங்கப்பட்டுவந்தது; ஆனுல், இதன் காரணமாக அந்நிய நாணயச் செலாவணி கரைவதற்கு வழி ஏற்பட்டுவிட்டதாம்.

காமராசரின் விசேட கவனத்திற்கு:

இலங்கையிலிருந்து துரத்தப்படும் மலையாளிகள்

வேலை தேடித்தர கேரள சர்க்கார் முயற்சிக்கும்

திருவனந்தபுரம், சூன் 11—

இலங்கையிலிருந்து துரத்தப்பட்டுத் தாயகம் வரும் தமிழ் மக்களுக்கு வாழ்வு தேடித்தரும் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் வகையில் சென்னை சர்க்கார்— அதன் முதல்வர் காமராசர், 'அதெல்லாம் அவர்களே பார்த்துக்கொள்வார்கள்' என்று கூறுகிருர் அல்லவா?

அவரது கவனத்திற்கு விசேடமாக உரிய ஒரு செய்தி இங்கிருந்து தரப்படுகிறது.

"இலங்கையிலிருந்து கேரளத்திற்குத் திரும்பிவரும் மலையாள மக்களுக்கு வேலை தேடித்தரும் விஷயம் குறித்து இந்த சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இந்த விவகாரம் குறித்து நாங்கள் மத்திய சர்க்காருடன் விவாதித்துக்கொண்டிருக்கிருேம்"

என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கேரள முதன் மந்திரி நம்பூதிரிபாத் தெரிவித்திருக்கிருர்.

கனடா தேர்தல்கள்

22 ஆண்டுகள் பதவியிலிருந்த கட்சிக்குச் சீட்டு

ஒட்டாவா, சூன் 11—

கனடா நாட்டுத் தேர்தல் முடிவுகள் சற்றும் எதிர்பாராத விதமாக வெளிவந்திருக்கின்றன.

கடந்த 22 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்து வந்திருக்கும் கட்சியினர் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைப் பெற முடியாமல் தோல்வி கண்டிருக்கின்றனர்.

முற்போக்குக் கன்சர்வேடிவ் கட்சியினருக்கு இம்முறைவெற்றி கிட்டியிருக்கிறது.

லாரண்ட்ஸ் பிரதமராயிருந்து நடத்தி வந்த மந்திரி சபையிலிருந்த எட்டு மந்திரிகள் தோற்றுள்ளனராம்.

வீட்டிலிருந்து கொண்டே நிலத்தை உழலாம்!

சிகாகோ, ஜுன் 11—

வீட்டிலிருந்துகொண்டே தன்னுடைய நிலங்களை கதிரியக்க டிராக்டர் மூலம் உழும் நாள் விரைவில் வரக்கூடும்.

அமெரிக்காவிலுள்ள இல்லிஞய்ஸ் என்ற பகுதியைச் சேர்ந்த கம்பெனி ஒன்று இத்தகைய டிராக்டர் இயந்திரத்தைத் தயாரித்துள்ளதாம். 15 மைல் தூரத்திற்குக் கதிரியக்கம் உள்ள எந்த பகுதியிலும் இந்த இயந்திரம் இயங்குமாம்.

இந்த இயந்திரத்தில் டெலிவிஷன் கருவியைப் பொருத்திவிட்டு, விவசாயி தூரத்தில் இருந்துகொண்டே இயந்திரத்தின் போக்கை உணர்ந்துகொள்ள முடியுமாம்.

தென் மாநிலங்களில் 'பஞ்சம்' வருமா?

'கவலைக்கிடமில்லை' என டில்லி தட்டிக்கழிக்கிறது

புதுடில்லி, ஜுன் 12—

தென் மாநிலங்களான சென்னை, கேரளம், ஆந்திரம், மைசூர் ஆகிய மாநிலங்களில் உணவு நிலைபற்றிய கவலைக்கு இடமில்லை என்று டில்லி அறிவித்துள்ளது.

ஆனல், இந்தத் தென் மாநிலங்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளனர்.

அறுவடை நெருங்கிவிட்டதால் விலைவாசிகள் கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேன்னை

சென்ற ஆண்டில் 29,60 000 டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டதாம். இந்த ஆண்டில் 31 இலட்சம் டன் மட்டுமே உற்பத்தியாகியுள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மைசூர்

சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் அரிசி உற்பத்தியாகியுள்ளதாம்.

ஆந்திரம்

'தென்னுட்டின் உணவுக்களஞ்சியம் என்று கூறப்படும் ஆந்திர மாநிலத்தில் எதிர்பார்த்த உணவு உற்பத்தி இல்லை என்று தெரிய வருகிறது. இந்த ஆண்டு 32 இலட்சம் டன் அரிசி உற்பத்தியாகியுள்ளதாம்.

1956-ல்கூட மத்திய அரசாங்கம் இம்மாநிலங்களுக்கு 66,000 டன் உணவுத் தானியம் தந்துள்ளதாம்.

இந்த மாநிலத்தில் உணவுப் பொருள்கள் அதிகமாகப் பதுக்கல் செய்யப்பட்டுள்ளதென்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் அரிசிப் பஞ்சமா?

அரிசியுடன் கோதுமை நியாய விலைக் கடைகளில் தரப்படுமா?

சென்னை, ஜுன் 12—

சென்னை மாநிலத்தில் தற்போது 690 நியாய விலைக் கடைகள் உள்ளன; இவற்றை 1000 ஆக அதிகப்படுத்தப்படுமாம்.

தற்போது மக்களுக்குத் தேவையான அரிசியை வழங்க முடியாத நிலையை முன்னிட்டு நியாயவிலைக் கடைகளில் கோதுமையையும் வழங்குவது பற்றி சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

நெருக்கடியைச் சமாளிக்க நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் அரிசியில் நான்கில் ஒரு பாகம் அல்லது மூன்றில் ஒரு பாகம் கோதுமை தருவதா என்பது பற்றி ஆராய்ந்து வருகின்றனராம்.

இனி நியாய விலைக் கடைகளில் அரிசி வாங்கும்போது சட்டாயமாக கோதுமையும் வாங்க வேண்டிய நிலையும் வரக்கூடுமாம்.

தோழர் தில்லை-வில்லாளன் சுற்றுப்பயண விவரங்கள்

★

12—5—57:

சிதம்பரத்தையடுத்த இளநாங்கூர் எனும் சிற்றூரில் தி.மு. கழக துவக்கவிழா நடைபெற்றது. தோழர் சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார். தோழர் இரா. சக்கரவர்த்தி கொடியேற்றி வைத்தார். தோழர்கள் நடனம், இராசகோபால், கனகசபாபதி, பாலகிருட்டிணன், புலவர் கூ. ஆறுமுகம், பொன் சொக்கலிங்கம், இரத்தினபாலகுருசாமி ஆகியோர் பேசிய பிறகு தோழர் தில்லை-வில்லாளன் 'சந்தேகியுங்கள், பயப்படாதீர்கள்' எனும் தலைப்பில் சமுதாய முன்னேற்றக் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

15—5—57:

சிதம்பரத்தையடுத்த கீழ்ச்சாவடி எனும் சிற்றூரில் தி. மு கழகத் துவக்கவிழா தோழர் பட்டாபிராமன் தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. சக்கரவர்த்தி கொடியேற்றி வைத்தார். தோழர்கள் இரத்தின பாலகுருசாமி, பாலகிருட்டிணன், புலவர் ஆறுமுகம், பொன். சொக்கலிங்கம், சிறுமி இளங்கோ ஆகியோர் பேசிய பிறகு தோழர் தில்லை வில்லாளன் 'தேர்தலுக்குப் பிறகு' எனும் தலைப்பில் கழகத்தின் பணியினை விளக்கிப் பேசினுர்.

19—5—57:

பெருஞ்சேரி எனும் சிற்றூரில் மாலை 6 மணிக்கு, தோழர் வெங்கடகிருட்டிணன் தலைமையில் விவசாயத் தொழிலாளர் முன்னேற்ற சங்க துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் கோ. சி. மணி, புலவர் ஆறுமுகம் பேசிய பிறகு தோழர் தில்லை வில்லாளன் உழவர்கள் நிலை பற்றியும், அவர்கள் முன்னேற்றம் பற்றியும் விளக்கவுரையாற்றினர்.

20—5—57:

சிதம்பரம் தி. மு. க. (உட்கிளை-1.) துவக்க விழா தோழர் இராமசாமி தலைமையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது. இவ்விழாவில் பொன்-சொக்கலிங்கம், புலவர் ஆறுமுகம் இரத்தின-பாலகுருசாமி ஆகியோர் பேசினர்கள். தோழர் தில்லைவில்லாளன் 'தி. மு. க. தொண்டர் கடமை' எனும் பொருளில், கழகத்தைக் கட்டிக்காக்கும் தொண்டர்கள் எவ்வளவு கட்டுப்பாடோடும், கண்ணியத்தோடும், தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும் என்று வற்புறுத்தி உரை நிகழ்த்தினர்.

24—5—57:

கீழகீரப்பாளையம் சேரியில் கலியபெருமாள்—பார்வதி திருமணம் தோழர் இரா. சக்கரவர்த்தி தலைமையில் நடைபெற்றது; மணமக்களைப் பாராட்டி தோழர்கள் பன்னீர்செல்வம், பொன்-சொக்கலிங்கம் பேசிய பிறகு தோழர் தில்லைவில்லாளன் அவர்கள் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு கழகம் செய்யும் தொண்டு பற்றியும், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் கழகத்திலே சேர்ந்து பணியாற்றுதல்வேண்டுமென்றும், அதன் அடையாளமாக இத்திருமணத் தம்பதிகள், இச்சேரியில் கழகத்தவர் முன்னிலையில் மணந்துகொண்டனர் என்றும் கூறி மணமக்களை வாழ்த்தினுர்.

26—5—57:

சிதம்பரத்தில் தி. மு. கழகத் (உட்கிளை-2) திறப்பு விழாவும் முல்லைப் படிப்பகத் திறப்பு விழாவும் வரி எதிர்ப்புக் கண்டனமும் ஒருசேர நடத்தப்பெற்றது. கூட்டத் துவக்கத்தில் தோழர் தில்லை-வில்லாளன் 'புதிய வரிவிதிப்பும், மக்கள் எதிர்ப்பும்' எனும் பொருளில் புதிய வரிகள் பற்றிய விளக்கம் தந்து, நிறைவேற்ற இருக்கும் தீர்மானங்கள் பற்றியும், பொதுச் செயலாளர் அறிக்கை பற்றியும் விரிவுரையாற்றினுர். பிறகு தோழர்கள் கே. ஜி. சாமிநாதன், சண்முகம், பொன். சொக்கலிங்கம். இரத்தினபாலகுருசாமி, கே. எம். வேலு பேசினர். இறுதியாக தோழர் இளம்வழுதி விரிவுரையாற்றினுர்.

27—5—57:

மாயவரம் நகரப் பூங்காவில் இரவு 8-மணியளவில் தோழர் அண்ணுமலை தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் தில்லை வில்லாளன் 'புதிய வரிகள்' என்ற தலைப்பில் விளக்கிப் பேசினுர். பிறகு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் நீண்டதொரு உரை வழங்கினுர். நன்றியுரையோடு கூட்டம் முடிந்தது.

30—5—57:

சிதம்பரத்தை யடுத்த கன்னங்குடியில் தி. மு. க. துவக்க விழா நடந்தது. தோழர் மலையரசன் தலைமை வகித்தார். தோழர்கள் பொன். சொக்கலிங்கம், புலவர் ஆறுமுகம் ஆகியோரும், சிறுமி இளங்கோவும் பேசிய பிறகு, தோழர் தில்லை-வில்லாளன் அவர்கள், அண்ணு அவர்கள் படத்தைத் திறந்துவைத்தார்.

தோழர் சி. பி. சிற்றரசு துவக்க விழா சொற்பொழிவாற்றினுர்.

2—6—57:

செயங்கொண்டம் அடுத்த மருவத்தூரில் காலையில் நிகழ்ந்த முருகேசன்—பார்வதி திருமணத்தில் தோழர் பொன்-சொக்கலிங்கம் வாழ்த்திய பிறகு, தோழர் தில்லைவில்லாளன் சமுதாய சீர்திருத்தக் காரியங்களில் பெண்கள் அதிகம் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்தி தன் வாழ்த்துதலைத் தெரிவித்தார்.

அன்று இரவு 7 மணியளவில், நக்கருகந்தக்குடி தி. மு. கழக 3-ம் ஆண்டு விழாவில் தோழர்கள் இராமசாமி, உத்திராபதி ஆகியோர் பேசிய பிறகு, தோழர் தில்லை-வில்லாளன் 'இன்றைய அரசியல் நிலை' என்பது பற்றி நீண்டவுரை நிகழ்த்தினுர். நல்ல மழையிருந்தும் பொதுமக்கள் கூடியிருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. 'கட்டபொம்மன்' நாடகத்தில் முக்கிய காட்சிகளை மாணவர்கள் நடத்திக்காட்டினுர்கள்.

3—6—57:

சோழக்கூர் எனும் சிற்றூரில் தோழர் வேலு தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகத் துவக்க விழா பொதுக்கூட்டத்தில் தோழர் மணி கொடியேற்றி வைத்தார். தோழர்கள் இரா. சக்கரவர்த்தி, புலவர்-ஆறுமுகம், பொன். சொக்கலிங்கம், சிறுமி இளங்கோ பேசினர். இறுதியாக தோழர் தில்லை-வில்லாளன் 'நமது இலட்சிய பாதை' எனும் பொருளில் அரசியல் விளக்கவுரை ஆற்றினுர்.

ஏற்றுமதி வரிகள் ரத்தாகுமாம்!

பம்பாய், ஜுன். 11—

சில சாமான்கள் மீது விதிக்கப்படும் ஏற்றுமதி வரி 'எக்சைஸ்' வரிகளை திரும்பப் பெறுவது பற்றி விரைவில் அரசாங்கத்தின் அறிக்கை வரும் என்று மத்திய அமைச்சர் ஷா தெரிவித்துள்ளார்.

விவசாயத்திற்கு மேட்டூர் தண்ணீர் விடப்படும்

சென்னை, ஜுன் 12—

ஜுன் 15-ந் தேதி முதல் மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து விவசாயத்திற்காகத் தண்ணீர் விடும்படி சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதாம்.

தலைமை நிலையச் செய்தி:

பொதுச்செயலாளர் சொற்பொழிவு

தோழர்களுக்கு அறிவிப்பு

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் புதிய வரித் திட்டங்களைக் கண்டித்து கடந்த மே திங்கள் 29-ந் நாளன்று சென்னைக் கடற்கரையில் ஆற்றிய சொற்பொழிவை, தம் மனம்போன வாக்கில் திருத்தியும் சிதைத்தும், கூட்டியும் குறைத்தும் புத்தக வடிவில் வெளியிடச் சிலர் முயற்சி செய்து வருவதாகத் தலைமை நிலையத்திற்குத் தெரியவருகிறது.

அந்தச் சொற்பொழிவு தி. மு. கழகத் தலைமை நிலையச் சார்பிலேயே புத்தகமாக அச்சாகிக் கொண்டிருக்கிறது என்பதையும், வேறெவரும் அதனைப் புத்தகமாகக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபடவேண்டாமென்பதையும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

தமிழ் மாவட்டங்களில் முந்திரி பயிராகும்?

லட்சிய அளவு 40,000 ஏக்கர்களாக நிர்ணயம்

சென்னை, ஜுன் 11—

செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்களில் 40,000 எக்கரில் முந்திரிச் செடிகள் வளர்க்க இலட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முந்திரி ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் பலன் கொடுக்கக் கூடியது. முந்திரிப் பருப்புக்கும், எண்ணெய்க்கும் வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது. காடுகளில் முந்திரி பயிரிடுவதால் இதர காட்டுப் பயிர்களுக்கு எவ்வித தீங்கும் கிடையாது.

திட்ட காலத்தில் செங்கற்பட்டில் 5,000 எக்கரும், கூடலூரில் 3,000 எக்கரும் காட்டுப் பகுதிகளில் முந்திரி பயிராகும். இதற்குச் செலவு ரூ. 4,38,000 ஆகும்.

வண்டலூர், காட்டூர் பகுதிகளில் ஒவ்வொன்றிலும் 500 எக்கர் முந்திரிப் பயிரிட்டிருக்கிறதென்றும், இந்தியாவிலேயே சிக்கன முறையில் காட்டுப்பயிராக முந்திரி முதன்முதலாக இங்குதான் பயிராகிறதென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

புது வரிகள்: நாடெங்கும் கண்டனம்

ஒடுவன்குறிச்சி:

26—5—57-ந் தேதி காலை 10 மணிக்கு தோழர் சொ. ர. சொக்கலிங்கம் தலைமையில் புதுவரிகள் கண்டன ஊர்வலம் முக்கிய தெருக்களின் வழியாக சென்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுக்கோட்டை:

26—5—57 இரவு 8 மணிக்கு புதுக்கோட்டை தி. மு. கழக சார்பில் திலகர் திடலில் தோழர் கரு. கணேசன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் க. ஞானமுத்து, ப. செழியன், க.சிங்கமுத்து, மற்றும் பலர் புதிய வரிகளைக் கண்டித்துப் பேசினர். புதுவரிகளைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விருத்தாசலம்:

26—5—57 மாலை 5 மணி அளவில் சிற்றூர் கிளைக்கழகங்கள் பல கலந்துகொண்டு புதுவரிகளை கண்டித்து மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்று தோழர் சி. முனுசாமி தலைமையில், முக்கிய தெருக்கள் வழியாக கண்டனப் பேரொலிகளை முழங்கியவண்ணம் சென்று, இறுதியில் வாஞெலித் திடலில் முடிவுற்றது. அங்கு தோழர் பொன்னம்பலம் பேசியபின், புதுவரிகளைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை — இராயப்பேட்டை:

இளைஞர் மன்றச் சார்பில் 26—5—57 காலை 10 மணிக்கு நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், புதிய வரிகளைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை — சிந்தாதிரிப்பேட்டை:

26—5—57 பிற்பகல் 2 மணி அளவில், 29-வது வட்ட நேப்பியர் பார்க்கிலிருந்து துவங்கிய கண்டன ஊர்வலத்தில் 30-வது வட்டத்திலுள்ள வள்ளுவர் மன்றம் கலந்துகொண்டது.

சென்னை—ஆதம்பாக்கம்

27—5—57 இரவு 9½ மணிக்கு ஆதம்பாக்கம் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, புதுவரிகளைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்றும், தூத்துக்குடி தோழர் தாளமுத்துவுக்கு வருத்தம் தெரிவித்துத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

அச்சப்பத்து:

26—5—57 காலை 10-மணிக்கு வ. உ. சி. படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் செயலாளர் நீ. கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது புதியவரிகளைக் கண்டித்தும், தாளமுத்து மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செயங்கொண்டம்:

26—5—57ல், புதிய வரிகளை எதிர்த்து தி. மு. கழகம் கண்டனம் தெரிவித்தது. தட்டிகள் மூலமும், துண்டு விளம்பரங்கள் மூலமும் வரிக் கொடுமை விளக்கப்பட்டது. அதன் நினைவாக கடை வீதியில் தி. மு. கழகக் கொடி ஏற்றப்பட்டது. மாலை 6-30 மணிக்கு தி. மு. கழக தொண்டர்களும், ஆதரவாளர்களும் அடங்கிய ஊர்வலம் காந்தி பூங்காவிலிருந்து புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாக சென்றது. இறுதியில் புதிய வரிகளைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோபிசெட்டிபாளையம்:

26—5—57 மாலை 7 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் கோபி பெரியார் திடலில் புது வரிகள் கண்டன நாள் கூட்டம் தோழர் எஸ். எம். அருணுசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பரசு, எஸ்.எஸ்.எம். சுப்பிரமணியம் ஆகியோர் புதுவரிகளைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினர். இறுதியில், புதிய வரிகளைக் கண்டித்தும், மற்றும் 2 முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு முன்னதாக புதுப்பாளையம் கிளைக் கழகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றது.

அருப்புக்கோட்டை:

26—5—57 மாலை 4 மணிக்கு கழக அலுவலகத்திலிருந்து தோழர் பி. பி. என். நல்லதம்பி தலைமையில் புதுவரி கண்டன ஊர்வலம் ஒன்று புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாக சென்று இரவு 7 மணியளவில் தியாகராய வாலிபர்சங்க முன்பாக நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டது; கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இன்றைய நிலையில் இனவேற்றுமை காட்டுவது உலகிற்கு ஏற்றதாகாது

பிறநாட்டு மக்களைச் சுரண்டி வாழ்வதற்கு இனி எந்த நாட்டுக்கும் சாத்தியமில்லை

ஜோகன்ஸ்பர்க், ஜுன் 12—

"இந்தக் காலத்தில் தொழில்கள் மலிந்துள்ளன ; கருப்பரும் வெள்ளையரும் ஒருவரையொருவர் நம்பித்தான் இருக்கவேண்டியுள்ளது. இந்த நிலையில் இன்வேற்றுமை காட்டுவதோ, பின்பற்றுவதோ நல்லதல்ல"

என்று அமெரிக்க குடியரசுத் தலைவர் பதவிக்கு ஐக்குடன் போட்டியிட்ட ஸ்டீவன்சன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், 'எந்த நாடும் அதிகக் காலம் தனித்து வாழ்வதென்பதோ, பிறநாட்டையோ மக்களையோ சுரண்டி வாழ்வதென்பதோ முடியாது. காலத்தின் மாறுதலை இனியாரும் தடுத்துவிட முடியாது. அடக்குமுறை, பயமுறுத்தல், இழிவுபடுத்துதல் முதலியன இன உணர்ச்சியை அதிகரிக்கவே பயன்படும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்டீவன்சன்மீது தென்னுப்பிரிக்க அமைச்சர் பாய்ச்சல்

ஜோகன்ஸ்பர்க், ஜுன் 12—

தென்னுப்பிரிக்க அரசாங்கத்தின் இனவேற்றுமைக் கொள்கையைக் கண்டித்து, நல்லறிவூட்டிய அட்லாய் ஸ்டீவன்சனை தென்னுப்பிரிக்க அரசாங்க அயல்நாட்டு அமைச்சர் எரிக் லோ கண்டித்துள்ளார்.

ஸ்டீவன்சன் பேசியது மரியாதைக் குறைவானதென்றும், தென்னுப்பிரிக்காவின் உள்நாட்டு விவகாரங்களில் அந்நியர் தலையிடுவதாகுமென்றும் அவர் கூறியுள்ளார்.

கொள்ளிடம் நதியின் குறுக்கே பாலம்

தஞ்சை—தென்னுற்காடு மாவட்டங்கள் இணைகின்றன

கொள்ளிடம், ஜுன் 11—

தென் மாவட்டங்களுக்கு சென்னையிலிருந்து சாலைகள் மூலம் செல்வதாயின், அணைக்கரையைச் சுற்றி செல்லவேண்டியிருந்தது.

வெகுகாலமாக நீடித்துவந்த இந்த நிலைமையில் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. கொள்ளிடம் நதியின் குறுக்கே பாலம் கட்டப்பட்டுவிட்டதால் தஞ்சை, தென்னுற்காடு மாவட்டங்கள் இணைப்பும், போக்குவரத்து எளிதும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார வகையில் இரு மாவட்டங்களுக்கும் பெரும் நன்மைகள் ஏற்படும்.

இந்த பாலம் 2,230அடி நீளம். இதைக் கட்டி முடிக்க ரூ. 34½ இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

வரலாறு

1903-ம் ஆண்டில் கொள்ளிடம் பாலம் வெள்ளத்தின் காரணமாக வீழ்ந்து விட்டதாம்.

தற்போது கட்டப்பட்டிருக்கும் பாலம் பழைய பாலம் இருந்த இடத்திலிருந்து 13·5 அடியும், இரயில்வே பாலத்திலிருந்து 1,115 அடியும் மேற்குத் திசையில் கட்டப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளிடம் நதியின் மூலம் அதிகப்படியாக வடியக் கூடிய தண்ணீரின் அளவு 2,70,000 'கியூ செக்ஸ்' என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தில் 150 அடிக்கு ஒருகணவாய் வீதம் 14 கணவாய்கள் உள்ளன.

பாலத்தின் அகலம் 32 அடிகள் என்றும், பாலத்தின் இரு புறங்களிலும் 5 அடி அகலத்திற்கு நடை பாதை அமைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறகிறது.

இந்தப் பாலத்தில் ஒரே சமயத்தில் இரண்டு லாரிகள் எதிர் எதிராகப் போக முடியுமாம்.

இந்தப் பாலம், தஞ்சை மாவட்டத்தை சென்னையுடன் நேரில் இணைய உதவி புரிகிறதாம்.

பாலத்தின் செலவு

இந்தப் பாலம் கட்டி முடிக்க தஞ்சை மாவட்ட ஆட்சி மன்றம் ரூ. 8 இலட்சமும், தென் ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றம் ரூ. 4 - இலட்சமும், ரூ. 22½ இலட்சம் பொது மாரமத்து இலாகா மானியமாகவும் தந்துள்ளதாம். ஆக மொத்தம் ரூ. 34½ இலட்சம் செலவிடப்பட்டுள்ளதாம்.

கைவிலங்கிடும் முறை ஒழிகிறது

கேரளத்தில் சிறைச் சீர்திருத்தங்கள்

திருவனந்தபுரம், ஜுன் 12—

கைதிகளுக்குக் கைவிலங்கு மாட்டுவது கேரள சர்க்காரால் ஒழிக்கப்பட்டிருக்கிறது.

கைதிகளுக்குத் தண்டனை எல்லாம் அவர்களுக்குத் தரப்படும் சில சலுகைகளை நிறுத்திவைப்பதன் மூலம், அல்லது குறைப்பதன் மூலமே தரப்படும் என்று இது பற்றிய சர்க்கார் உத்தரவு ஒன்று கூறுகிறது.

கைதிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சில தேவையில்லாத கட்டுப்பாடுகள் எல்லாம் ஒழிக்கப்படும்.

அவர்களுக்குத் தரப்படும் உடையில் அவர்களைக் கேவலப்படுத்தக் கூடியதாக கோடுகள் போன்ற எந்தக் குறிப்புகளும் இருக்கமாட்டாது.

சிறு சட்டைகளுக்குப் பதிலாக முழுச் சட்டைகள் தரப்படும்.

வேலை செய்யும் நேரம் தவிர இதர நேரங்களில் புகை பிடிப்பதற்குக் கைதிகள் அனுமதிக்கப்படுவர்.

பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கடிதம் அனுப்பவும் வாரம் ஒரு முறை உறவினர்களைக் காணவும் அனும்திக்கப்படும்; இப்போது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறைதான் கடிதம் எழுதவும் உறவினர்களைக் காணவும் அனுமதிக்கப்பட்டு வருகிறது.

கைதிகள் ஒட்ட முடிவெட்டிக் கொள்ள வேண்டும் என்ற உத்தரவும் தளர்த்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அடுத்த ஆண்டில் 8,000 பஞ்சாயத்துகள்

சென்னை அமைச்சர் தகவல்

கோவை, ஜுன் 11—

'கிராமத்திற்கு ஒரு பஞ்சாயத்து திறவ அரசாங்கம் விரும்புகிறது' என்று அமைச்சர் லூர்து அம்மாள் தெரிவித்துள்ளார்.

தற்போது சென்னை மாநிலத்தில் 2,000 பஞ்சாயத்துக்கள், 60 நகர சபைகள், 11 மாவட்ட ஆட்சி மன்றங்கள் உள்ளனவாம்.

இன்னும் ஓராண்டு காலத்தில் 8,000 புதிய பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்படுமாம்.

10,000 பேர் புத்த மதத்தில் சேர்ந்தனர்

அகோலா ஜுன் 12—

விதர்ப்பப் பகுதி தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர் கம்பிளே முன்னிலையில் 10,000 - தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், இந்து மதத்தை விட்டு புத்த மதத்தில் சேர்ந்துவிட்டனர் என்று செய்தி கிடைத்துள்ளது.

கழகக் கூட்டங்கள்

★

பழயகாயல்:
(நெல்லை மாவட்டம்)
15—6—57 இரவு 7 மணிக்கு
தலைவர் : துரை
பேசுவோர் :
வ. சேகவீரராசேந்திரன்
ச. வீரபாகு
என். தேவன்
ஆ. அண்ணுமலை

★

தெலுங்கன்குடிக்காடு :
(தஞ்சை மாவட்டம்)
அழகிரி அரங்கில்
தி. மு. கழகத் துவக்கவிழா
14-6-57 மாலை 4-30 மணிக்கு
தலைவர் : கே. உலகப்பன்
கொடியேற்றுபவர் :
டி. எம். தயிலப்பன்
பேசுவோர் :
என். வி. நடராசன்
என். எஸ். இளங்கோ

★

சோழவந்தான் :
பாண்டியனுர் திடல்
15-6-57 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: மா. வேலன்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
மா. பாண்டியன்

★

இராசகிரி :
இராசகிரி மெயின் ரோடு
14—6—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர்: க.சோ. இராமச்சந்திரன்
பேசுவோர் :
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
குடவாசல் கிருட்டிணமூர்த்தி
பத்மநாபன்
இராதா
அய்யூப்கான்
கிட்டப்பா
காளிதாஸ்

★

செம்புளிச்சாம்பாளையம்:
(பவானி வட்டம்)
சாவடித் திடல்
15—6—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : ஆண்டிப்ப கவுண்டர்
பேசுவோர் :
சிற்றுளி சுப்பிரமணியம்
எஸ். அப்பாவு
எஸ்.எஸ்.எம். சுப்பிரமணியம்
அத்தாணி பாபு

தற்காலிகமானதா?

ஓராசிரியர் பள்ளிகளில் வேலை பெற்ற ஆசிரியர்கள் நிலைமை

சென்னை, ஜுன் 11—

'திட்டக் குழுவின் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஓராசிரியர் பள்ளிகளில் வேலைபெற்ற ஆசிரியர்கள் நியமனம் தற்காலிகமானதுதான்' என்று தென்னிந்திய ஆசிரியர் சங்கத் தலைவருக்கு கல்வி இலாகா டைரக்டர் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மாவட்ட ஆட்சி மன்றங்களின் கீழுள்ள தற்காலிக ஊழியர்களுக்கு இருப்பது போன்ற சலுகைகளே ஓராசிரியர் பள்ளியில் பணியாற்றுவோருக்கும் இருக்குமென்று தெரியவருகிறது.

அஞ்சோம்—சமர் புரிவோம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாய்க்கப் போவதில்லை. அதுகுறித்துப் பரிசீலிக்க, கட்சியின் செயற்குழு அவசரமாகக் கூட வேண்டும் என்ற அவசியமும் இல்லை. பண்டாவின் மிரட்டல்களுக்கெல்லாம் கூட நாங்கள் அஞ்சுவதாயில்லை; நிச்சயித்தபடி உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டே தீருவோம்; தொண்டர்கள் போராட்டத்திற்குத் தயாராகி வருகின்றனர்"

என்று, தமிழரசுக் கட்சியின் செயலாளரான டாக்டர் நாகநாதன் அறைகூவல் விடுத்திருக்கிறுர்.

இலங்கை கம்யூனிஸ்டுத் தலைவர் கந்தையா

தமிழர்களால் வெறுத்து ஒதுக்கப்படும் விதம்

இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சியினரை அங்குள்ள தமிழர்கள் எந்த அளவு மதிக்கிறுர்கள் என்பதை விளக்கும் செய்தியினை இலங்கையிலிருந்து வெளிவரும் 'சுதந்திரன்' இதழ் தெரிவித்திருக்கிறது; அதனை கீழே தருகிறேம் :—

ரஷ்யாவில் நீண்டகால ஓய்வெடுத்துவிட்டுத் தாயகம் திரும்பிய பருத்தித்துறைப் பிரதிநிதியும், 'டுஸ்னியூம்கொ'த் தோழருமான தி. பி. கந்தையாவுக்கு பலத்த எதிர்ப்புக்கிடையே அவரது பிறந்தகமான கரவெட்டியில் அநேகமாக நெருங்கிய உறவினர்களால் கடந்த 22-ந் தேதி ஒரு வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டதாகவும், அது, தோழருக்குத் தன் பிறந்தகத்திலேயே எவ்வளவு 'செல்வாக்கு' இருக்கிறது என்பதை தெளிவாகக் காட்டுவதாய் அமைந்ததென்றும் இலங்கை 'சுதந்திரன்' நிருபர் அறிவிக்கிறுர்.

தொழிலாளர் தலைவர் என்று தம்மைத் தாமே விளம்பரப்படுத்திக்கொள்ளும் தோழர் கந்தையாவுக்கு வரவேற்பு உபசாரம் ஊர்வல ஒழுங்குகளைச் செய்தவர்கள் தொழிலாளர்களல்ல; ஏழைப் பொதுமக்களுமல்ல; பெரும்பாலும், கரவெட்டிப் பகுதியிலுள்ள கொழுத்த மில் முதலாளிகளே அவற்றைச் செய்தார்கள். இதோ அந்தப் பட்டியல் :—

1. ஞானம் மில்ஸ்
2. வட. ஐ. விளை பொருள் சங்கம்
3. யோகம் மில்ஸ்
4. லட்சுமி தியேட்டர்
5. தங்கம் மில்ஸ்
6. முருகன் மில்ஸ்
7. கணேசன் மில்ஸ்

இந்த அசம்பாவிதம் தோழர்கள் கனவிலும் எதிர்பாராத ஒன்றுகும்.

'டுஸ்னியூம்கொ' தோழர்களின் தற்கால பாரம்பரியத்துக்கேற்ப மக்கள் கூட்டத்தை எதிர்பார்த்து ஊர்வலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சினடி, சிலம்படி, கரக நிகழ்ச்சிகளும், விளம்பரப்படுத்திய வாணவேடிக்கைகளும் தோழர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையே கொடுத்தன.

யாழ்ப்பாணத்தின் மேற்குக் கோடியிலிருந்து வான்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட 'பிரகிருதி'களின் எண்ணிக்கைகூடக் கூட்டத்தைப் பொலிவுறச் செய்யத் தவறிவிட்டது. இது தோழர்களுக்கு ஏமாற்றத்தின்மேல் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

ஊர்வலப் பாதையில் இருமருங்கும் அகில இலங்கைத் தமிழ் பேசும் வாலிப முன்னணி உறுப்பினர்கள், மேற்குறிப்பிட்ட சங்கக் கொழும்புக் கிளைத் தலைவர் திரு. கு. விக்கினராஜா தலைமையில் நீக்கமற நின்று கருப்புக் கொடிகளையும், 'கம்யூனிஸ்டுக் கட்சி பச்சோந்திகள் கூடாரம்'—'கந்தையாவே கட்சியிலிருந்து வெளியேறு'—'தமிழனைத் தமிழனுக வாழவிடு; இன்றேல் பதவியை இராஜிநாமா செய்'—தமிழர் போராட்டத்தில் பங்குகொள்; இல்லையேல், பிரதிநிதித்துவத்தைத் துற'—என்று, கோரும் சுலோக அட்டைகளையும் உயர்த்தித் தமது அதிருப்தியையும், எதிர்ப்பையும் காட்டினுர்கள். அவர்கள் வைத்து முழக்கிய சோகத்தின் அறிகுறியான பறையோசை ஊர்வலத்தின் முன்னணியில் சென்ற ஏழெட்டு மேளங்களின் மங்கள நாதத்தை விழுங்கி விட்டது. ஒழுங்கான முறையில் நடந்த எதிர்ப்பு அணியின் எடுப்பான ஏற்பாட்டின் முன்னுல் ஊர்வலத்தின் எதிர்பார்த்த கோலாகலம் ஒடுங்கிவிட்டது. இது தோழர்களுக்குச் சொல்ல முடியாத ஏமாற்றத்தைக் கொடுத்தது.

வெத்து வேட்டு

நடைபெற்ற கூட்டத்தில் தோழர் பேசுகையில் ஒரு வெத்து வேட்டை வெடித்தார் — 'என் கொள்கை என் தொகுதி வாக்காளர்களுக்கு ஏற்றதாயில்லையென்றுல், அதை அவர்கள் எனக்கு அறிவிக்கும் அதே நிமிடத்தில் நான் பதவியிலிருந்து இராஜிநாமாச் செய்யத் தயார்' என்று அக்கம் பக்கம் பார்த்து விட்டு உறுமினுர்.

எதிர்ப்புகள்

பருத்தித் துறை கடற்கரை மைதானத்தில் நடைபெறவிருந்த வரவேற்பு உபசாரக் கூட்டம், கோழைத்தனமாக, திரு. கந்தையாவின் பிறப்பிடமான கரவெட்டியைச் சேர்ந்த மூர்த்தி நயினுர் கோவிலடியில் நடந்ததே, பருத்தித் துறை மக்கள் காட்டிய பலத்த எதிர்ப்பினுல்தான்!

பருத்தித்துறைத் தொகுதித் தொழிலாளர்கள் வைபவத்தில் கலந்துகொள்ளாது ஒதுங்கிக் கொண்டது தோழரின் தலைமையையும், அவரின் கொள்கையையும் எதிர்த்ததனுல்தான்!

அகில இலங்கைத் தமிழ் பேசும் வாலிப முன்னணியினர் முன்னின்று நடத்திக் காட்டியதும் தோழரின் கொள்கைக்கு எதிர்ப்புத்தான்! அப்படியிருந்தும் தோழர் தமது உரையில் கூறினுர்—தமது கொள்கைக்கு எதிர்ப்பு இருப்பின் தாம் உடனடியாகப் பதவியை ராஜிநாமாச் செய்து விடுவேனென்று! ஆனுல், அது நடக்கவில்லை. இனி நடக்கும் என்று எதிர்பார்ப்பதற்குமில்லை. என்னே இவரின் கண்ணும்க[illegible]தும்—சொல்லும் செயலும்—என்று, கூட்டத்தில் இருந்த தோழரின் நெருங்கியவர்கள்கூட வாயில் விரல் வைத்துப் பிரலாபித்தனர்!

காஞ்சியில் பிச்சைக்காரர் விடுதி ஏற்படும்

காஞ்சி, ஜுன் 12—

யாத்திரைக்குப் புகழ்பெற்ற காஞ்சிபுரத்தில் பிச்சைக்காரர்களுக்கு ஒரு விடுதியை ஏற்படுத்த சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இங்கு 100 பிச்சைக்காரர்களுக்கு மருத்துவ உதவி, உடை, உணவு இலவசமாகத் தரப்படுமாம்.

சொற்பயிற்சிக் கூட்ட துவக்கவிழா

15—6—57 இரவு 9-மணிக்கு சேலம் நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் (சென்டிரல் திரையரங்கின் எதிரில்) சொற்பயிற்சிக் கூட்ட துவக்கவிழா தோழர் இ. ஆர். கிருட்டிணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர். மற்றும் பயிற்சிபெற விரும்பும் தோழர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டப்படுகிறுர்கள்.

திருச்சி—பாலக்கரை கருணு படிப்பகத் துவக்கவிழா

15—6—57 மாலை 6-மணிக்கு திருச்சி—பாலக்கரை, பிரபாத் டாக்கீஸ் அருகில் மேற்படி படிப்பகத் துவக்கவிழா தோழர் ஐ. எம். சரீப் அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் கண்ணதாசன், எம். எஸ். மணி, எஸ். நெடுமாறன் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.